ஒன்றுமே செய்யாமல் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது ஒருவரிடமிருந்து மற்றொருவரோ உத

(7 ஆம் பக்கம் பார்க்க)

# 'கிட்டுவின் பாதுகாப்புக்கான உறுதியை இந்தியா மீறிவிட்டது'

கொழும்பு, ஜன.21.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான 'கிட்டு' என அழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமாரின் பாதுகாப்பான பயணத்திற்காக வழங்கியிருந்த உறுதியை இந்தியா மீறி விட்டது என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

''கிட்டுவினுடைய திட்டத்திற்கு, அவருக்கும் அவருடைய பயணத்திற்கும் பாதுகாப்பு வழங்கும் தனது விருப்பத்தை இந்திய அரசு எமக்குத் தெரிவித்திருந்தது'' என புலிகள் அமைப்பின் பேச்சாளரான அன்டன் பாலசிங்கம் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாநாட்டில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போதே பாலசிங்கம் இதனைத் தெரிவித்தார். (ராய்ட்டர்)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்